1974 எப்ரல் 9]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/74).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, . . .

(5) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட தொகைக்கும் சேர்த்து 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவில் இரண்டாவது முறையாக ஒட்டு மொத்தமாக அனுமதி கோரியது முறைதானா என்பது குறித்து.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த நிதி ஒதுக்க மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பாக இடைக்கால ஏற்பாடாக 192 கோடி ரூபாய்க்கு இந்தச் சபை அனுமதி அளித்திருக்கிறது. அப்படி ஏற்கனவே அனுமதி அளித்த பிறகு அந்தத் தொகையையும் சேர்த்து, இரண்டாம் தடவையாக ஒட்டுமொத்தமாக இந்த மசோதா கொண்டு

வரப்பட்டிருக்கிறது. ஒரு தொகைக்கு இரண்டு தடவைகள் இந்தச் சபையினுடைய அனுமதியைப் பெறுவது, அப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது முறையானதுதானா? அம்மாதிரி செய்யலாமா? முதலிலே 192 கோடி ரூபாய் அனுமதி கொடுத்து ஒரு நிதி ஒதுக்கல் மசோதா இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த 192 கோடி ரூபாயையும் கழித்து பாக்கியுள்ள தொகைக்குத்தானே இங்கே அப்ரோப்ரியேஷன் பில் கொண்டு வந்தாக வேண்டும். முதலில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு உள்பட்ட அந்தத் தொகையையும் சேர்த்து இப்பொழுது இங்கே இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே அப்படித்தான் இருக்கிறது. அந்தத் தொகையும் உள்ளடக்கித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1974.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே . . .

திரு. என். கே. பழனிசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இம்மாதிரி அப்ரோப்ரியேஷன் பில்லில் தலைவர்கள்தான் பேசவேண்டும் என்று அசெம்பளி ரூல்ஸில் கிடையாது. முக்கியமான பல பிரச்னைகளைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது.

ஸ்டாண்டர்டு கிளாத் விலை ஏறியிருக்கிறது. கோதுமை மொத்த வியாபாரத்தைப்பற்றி எல்லாம் பேசவேண்டியிருக்கிறது. எல்லாப் பொருள்களுடைய விலையும் ஏறியிருக்கிறது. இதைப்பற்றி அசெம்பளியில் கிளப்புவதற்கு எங்களுக்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் கிடையாது. இருக்கக்கூடிய தலைவர்கள் பூராவும் எல்லாவற்றையும்பற்றி அவர்களே பேசிவிட்டு, நாட்களையும் குறைத்து வைத்துக்கொண்டால், எங்களைப் போன்றவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, இதுபற்றி தங்களுடைய ரூலிங் தேவை.